Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.7**

| | | | |
|---|---|---|---|
| Name: | தங்கராஜன் | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | தாதக்குட்டிகவுண்டர் | Religion: | இந்து |
| Village: | | Age: | 59 |
| Taluk: | நாற்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.12.2024

SIGN :

(எதிரிகள் இருவரும் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.7 முதன்மை விசாரணை

நான் தற்போது சாலை ரோந்து பணி எண்.3 ல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 30.06.2017ம் தேதி வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலையத்தில் நிலைய பணியில் இருந்த தலைமை காவலர் 1255 சம்பத் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவமனை தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த வாதி வேணு வயது64, த/பெ பெருமாள், மாரியம்மன் கோவில் தெரு, குந்தாணிமேடு கிராமம், இளைய நகரம் போஸ்ட், வாணியம்பாடி தாலுக்கா என்பவரிடம் ஒரு புகார் வாக்குமூலம் 13.00 மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்து காவல் நிலையம் சேர்ந்து என்னிடம் சமர்பித்த மேற்படி

வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண். 235/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கினை 30.06.2017 ம் தேதி எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்று மாலை 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் சுந்தரமூர்த்தி மற்றும் முத்தரசன் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர். மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே நாள் 15.30 மணிக்கு வாதியை வழக்கின் எதிரி கோபிநாத் என்பவர் தாக்க பயன்படுத்திய கட்டை பிடி போட்ட சூரிக்கத்தி ஒன்றை கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதே நாள் 30.06.2017 ம் தேதி மாலை 18.00 மணிக்கு மேட்டுப்பாளையம் கூட்ரோட்டிடம் 1ம் எதிரி கோபிநாத் நின்றுகொண்டிருப்பதாக எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரியை கைது செய்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தோம். எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் மாலை 18.30 மணிக்கு நிலையம் சேர்ந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். படிவம் 91 மூலம் வழக்குசொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி கொண்டேன், **படிவம் 91 அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கட்டை பிடி போட்ட சூரிக்கத்தி வழக்கு நிமித்தம் கைப்பற்றியதாகும், **கட்டை பிடி போட்ட சூரிக்கத்தி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு சாட்சிகள் வேணு, கோமதி, காந்தி, அண்ணாமலை, ஆகியோர்களை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன், பின்னர் வழக்கு கோப்பை எனது முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திருமதி, ஹேமாவதி அவர்களிடம் சமர்பித்துக்கொண்டேன், எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளதை போல் சொன்னார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

தலைமை காவலர் சம்பத் என்பவர் அசா1ம் வாக்குமூலம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், மேற்படி வாக்குமூலத்தில் 28.06.2017ம் தேதி என குறிப்பிடப்பட்டு பிறகு 29.06.2017 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த திருத்தம் குறித்து நான் விசாரித்த சமயத்தில் வாக்குமூலம் பெற்ற தலைமை காவலர் சம்பத்திடம் விசாரணை செய்தேனா என்றால் அதை பற்றி வாக்குமூலம் பெறவில்லை. நான் அசா1 வேணு என்பவரை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 30.06.2017ம் தேதி விசாரணை செய்தேன், தலைமை காவலர் சம்பத் அசா1ம் வாக்குமூலம் பெற்று 02.00 மணிக்கு கொடுத்தார், நான் வாக்குமூலத்தை பெற்று 14.00 மணிக்கே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டதாக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், தலைமை காவலர் அசா1ம் வாக்குமூலம் பெற்று என்னிடம் கொடுப்பதற்கு முன்பே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல, மேற்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய நான் அரை மணி நேரம் எடுத்து கொண்டேன். காவல் நிலையத்திலிருந்த சம்பவஇடம் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சுமார் 5 அல்லது 6 கிலோமீட்டர் இருக்கும், சம்பவ இடத்திற்கு செல்ல அரைமணி நேரம் ஆகும் என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் சாட்சிகளை விசாரிக்க சுமார் 2 மணி நேரம் எடுத்து கொண்டேன்.

பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி சுந்தரமூர்த்தி, முத்தரசன் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கட்டை பிடி கொண்ட சூரி கத்தி ஒன்றை கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசரில் வழக்கு சொத்தின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் நிலையம் சேர்ந்து கொடுத்த புகார் கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தட்டச்சு பிழை. அசா1 சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என கூறியுள்ள நிலையில் அதை குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தை குறிப்பிட்டு வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாக்குமூலத்தில் எந்த பல், எத்தனை பல் விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தின்போது 1ம் எதிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது, அசா1 மற்றும் எதிரி ஒரே நாளில் தான் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

எதிரி கொடுத்த புகாரின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அவர் மருத்துவமனையிலிருந்து தலைமறைவாகி விட்டதால் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை, நடவடிக்கையும் எடுக்கவில்லை. 30.06.2017ம் தேதி மதியம் 01.00 மணியளவில் 1ம் எதிரி மருத்துவமனையிலிருந்து தலைமறைவாகி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசா1மும் அதே தேதியில் தான் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி தலைமறைவாகி விட்டார் என்ற தாளில் யார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அரசு மருத்துவர் திரு. ராம்பாலாஜி. அசா1 ன் விபத்து பதிவேட்டில் தெரிந்த 3 ஆண் நபர்கள் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வது நபர் யார் என நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் எதிரிகள் 2 பேர் தான் அடித்தார்கள், தெரியாமல் 3 நபர் என்று மருத்துவரிடம் கூறிவிட்டேன் என்று அசா1 கூறினார், மேற்படி விவரத்தை நான் வாக்குமூலமாக பதிவுசெய்தேனா என்றால் இல்லை. நான் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். அசா1ன் வாக்குமூலத்தில் என்னுடைய பின் முதுகில் சூரி கத்தியால் கிழித்துவிட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

காந்தி மற்றும் அண்ணாமலை இருவரும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அது தவறு. விழுந்ததாக சொன்ன பல்லை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் அவர்கள் முன்னிலையில் எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை, எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை விசாரணைக்காக அழைத்து வந்து அவர் மீது தவறான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என்னால் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் இவ்வாறு நடக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல, 1 முதல் 7 சாட்சிகளை நான் காவல் நிலையத்திலேயே விசாரித்து அவர்களை நான் சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சம்பவ இடம் செல்லவில்லை, வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலேயே வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் கைப்பபற்றியதாக சொல்லும் சூரி கத்தி எதிரி சம்பவத்தில் பயன்படுத்தியது இல்லை என்றால் அது தவறு, எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) தங்கராஜன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.